**செ. கு. எண்:359** **நாள்:07.10.2012**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி – 7.10.2012**

---

பழம்பெரும் தமிழ்த் திரைப்பட இயக்குநர் திரு. ஏ. ஜெகநாதன் அவர்கள் திடீர் மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இன்று காலை இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

திரைப்பட இயக்குநர் திரு. ப. நீலகண்டன் அவர்களிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்த காலத்திலிருந்து திரு. ஜெகநாதன் அவர்களை எனக்கு நன்கு தெரியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் நானும் இணைந்து நடித்த “காவல்காரன்”, “கணவன்”, “என் அண்ணன்’’, ‘‘கண்ணன் என் காதலன்’’, போன்ற பல படங்களில் உதவி இயக்குநராக திறம்பட பணியாற்றியவர் திரு. ஜெகநாதன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த “இதயக்கனி’’ திரைப்படம் மூலம் தமிழ்த் திரையுலகில் இயக்குநராக அறிமுகமான திரு. ஜெகநாதன் அவர்கள் 50–க்கும் மேற்பட்ட திரைப்படங்களை இயக்கியுள்ளார். பல்வேறு வெற்றிப் படங்களுக்கு சொந்தக்காரர். எல்லோரிடமும் இனிமையாகப் பழகக்கூடிய ஒரு நல்ல மனிதர். திரு. ஜெகநாதன் அவர்களின் மறைவு தமிழ்த் திரைப்படத் துறைக்கு மிகப் பெரிய இழப்பாகும்.

திரு. ஜெகநாதன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**